3. பொதுவான கிணறு ஒன்றும்: கரைப்பதற்கு ஏற்ப குளம் ஒன்றும் மற்றும் கோடைக்காலங்களில் அமிழ்ந்து குளிக்க ஒரு குளமும் ஏற்பாடு செய்தல்.

4. சுற்றுச்சுவர் எழுப்புதல்.

5. தேவைக்கேற்ப உபாத்யாயர்களையும் பரிசாரகர்களையும் ஏற்பாடு செய்து தருதல்.

6. வருடாந்திர ஸ்ரார்த்த/திருவத்யானங்கள் செய்ய தனிக்கட்டிடம் மற்றும் ஸ்ரார்த்தம் செய்ய வசதி செய்து கொடுத்தல்.

7. 24மணி நேரமும் பாதுகாப்புடன் கூடிய தங்கும் வசதிகொண்ட கட்டிடம் அமைத்துத்தருதல்.

மேற்கூறி செயல்பாடுகளுக்கு குறைந்தபட்சமாக 50 லட்சம் தேவைப்படும் என அனுமானிக்கப்படுகிறது.

இந்த கைங்கர்யங்கள் பற்றிய விபரங்களை பீடாதிபதிகளின் ஆலோசனைகளைப்பெற்று அவர்களின் ஆசீர்வாதம் மற்றும் உதவியுடன் செயல்படுவது.

இந்த டிரஸ்டியினரால் தக்க உபாத்யாயர்களையும்: பரிசாரகர்களையும் போக்தாக்களையும் ஏற்பாடு செய்து தரத் தேவையான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது. இந்த செயல்பாடுகளுக்கு மிகுந்த பொருளுதவி தேவைப்படுகிறது.

ஆகவே ஒவ்வொரு தனி நபரையும், இந்த உயர்தரமான லட்சிய செயல்பாட்டிற்கு தங்களால் இயன்ற உதவிகளை வாரி வழங்கவும். இதனால் ஏற்படக்கூடிய பலன்களை அனைவரும் பெற்று உய்யவும் தங்களின் உறவினர் மற்றும் நண்பர்களிடம் எடுத்துரைத்து இந்த தர்மகாரியங்களில் அங்கம் வகிக்க ஏற்பாடு செய்து தரும்படியும் கேட்டுக்கொள்கிறோம்.